# சித்தர் பாடல்களில் அறிவியல் சிந்தனைகள்

**கு. வித்யா[1] & முனைவர் பா. சகாயராஜ்[2]**

**[1]முனைவர் பட்ட ஆய்வாளர், [2]பேராசிரியர் மற்றும் புலமையர்,**

**தமிழ்த்துறை, கலை மற்றும் மானுட அறிவியல்,**

**மீனாட்சி உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் நிகர்நிலைப் பல்கலைக்கழகம்,**

**சென்னை - 78.**

vidhya.k050596@gmail.com, deanfhs@maher.ac.in

**26**

**ஆய்வுச்சுருக்கம்**

சித்த மருத்துவத்தைப் பற்றி ஆராய்ந்தால் சித்தர்களின் சிறந்த விஞ்ஞான அறிவைக் காணலாம். அவர்தம் அகத்தில் உதித்த அறிவியலும், சிந்தனைகளும், வானவியல் மருத்துவமும் மற்றும் உடல் தத்துவமும் கொண்டு ஆராயப்பட்டுள்ளன. இம்மருத்துவத்தில் எவ்வித பக்க விளைவுகளும் ஏற்படுத்தாத சித்த மருத்துவத்திற்கு உறவினர்கள் நாம் என்பதை மறந்த சமுதாயமாக வாழ்ந்து வருகின்றோம் . ஆகவே சித்த மருத்துவத்தின் தனிச் சிறப்புகளை பல நூற்றாண்டுகளுக்கு முன் நமக்கு அருளிச் செய்கின்றன. சித்தர்கள், பாடலில் அறிவியல் சார்ந்த மருத்துவக் குறிப்புகளை இளைய தலைமுறையினருக்கு எடுத்துச் சென்று சேர்க்கும் நோக்கத்தை ஆராயும் விதமாக இவ்வாய்வு அமைகிறது.

**திறவுச்சொற்கள்:** மருத்துவம், கோட்பாடு, விஞ்ஞானம், மெய்யானம், சித்த ஆன்மிகம்

**முன்னுரை**

வாழ்வியலை படம் பிடித்து காட்டும் கால கண்ணாடியே இலக்கியங்களாகும். **“கல்தோன்றி மண்தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்த குடி எங்கள் தமிழ் குடி”**அக்குடியில் தோன்றிய சித்தர்கள் அறிவாந்த நோக்கத்தோடும் அறிவியல் பார்வை கொண்டும் கருவிகள் இல்லாத காலத்தில் நுண்ணோக்கு சிந்தனையோடு படைக்கப்பட்ட மருத்துவமே சித்த மருத்துவமாகும். மேலும் **உணவே மருந்து, மருந்தே உணவு** என்பது இருபதாம் நூற்றாண்டின் அறிவியல் கண்டுபிடிப்பாகும். இந்த உண்மையைப் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் உணர்ந்திருப்பதை, சித்தர் பாடல்கள் மூலம் நாம் அறியலாம். சித்தர் பாடல்கள் யாவும், மனித இனத்திற்குப் பல வகையிலும் பயன்படக்கூடியதாகவே இருக்கிறது. ஆகவே உலகத்தில் முதன் முதலில் தோன்றிய தமிழ் மக்களிடையே பயன்படுத்தப்பட்ட சித்த மருத்துவமே மிகவும் பழமையான மருந்துவமாகும்.

**சித்தர்கள் விளக்கம்**

சித்து என்னும் சொல், தெளிந்த ஞானத்தைக் குறிக்கும். ஞானம் பெற்றவர்கள் சித்தர்கள் என அழைக்கப் பெறுவர். உலக வாழ்க்கையில் ஞானி, ரிஷி, முனி, குரு எனப் பல சித்தர்கள் தமிழகத்தில் ஆங்காங்கு வாழ்ந்து வந்துள்ளனர். இவர்களிலிருந்து சற்று வேறுபட்டவர்களே சித்தர்கள். அவர்கள் சாகா நிலையையும், அழியாத உடம்பையும் பெற்றவர்கள். உடம்பை அழிந்து போகாமல் பாதுகாக்கும் வழி அறிந்தவர்கள். தம்முடைய உடம்பை அப்படியே வைத்துவிட்டு மற்றொரு உடம்பிலே புகுந்து நடமாடும் சக்தி படைத்தவர்கள் இதற்கு **“கூடு விட்டு கூடு பாய்தல்”** என்று பெயர்.

சித்தர்களுக்கு வானமார்க்கமாக சொல்லும் ஆற்றல் உண்டு எனப் புலனாகிறது. ஒரு சித்தரைப் போல இன்னொரு சித்தர் இருப்பதில்லை அவர்களின் செயல், பேச்சி, பழக்கம், உறவுமுறை, பாட்டு ஆகிய எல்லாவற்றிலும் ஒவ்வொரு சித்தருக்கும் ஒரு தனிப்பண்பு இருக்கின்றன. சித்தர்கள் முக்காலங்களைப் பற்றி அறியும் ஞானமும், பலவிதமான அற்புதங்களை செய்யும் ஆற்றலும் படைத்தவர்கள். உடம்பினையும், உள்ளத்தையும், உயிரையும் ஆராய்ந்து பல நுட்பமான அற்புத இரகசியங்களைத் தமிழகத்தில் சித்தர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். இன்று ரஷ்யாவிலும், பல்கேரியாவிலும், ருமேனியாவிலும், செக்கோஸ்லேவாகியா ஆகிய நாடுகளில் உள்ள பல்கலைக்கழக அறிவியல் துறையில் நவீனக் கருவிகள் கொண்டு ஆய்வுசெய்து வெளியிட்டுள்ள பல விஞ்ஞான உண்மைகள், நமது சித்தர் இலக்கியத்திலுள்ள உண்மைகளை அப்படியே உறுதிப்படுத்துகின்றன. அதாவது இன்றைய விஞ்ஞானம் நமது மெய்ஞ்ஞானத்தின் வழியிலே முன்னேறிக் கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல இத்தகைய அறிவியல் இரகசியங்களை எழில்மிகுந்த கவிதைகளிலே சித்தர்கள் நமக்காகப் பாடியிருப்பது இன்னொரு சிறப்பாகும். சித்தர் தொகையைப் போலவே அவர் தம் இலக்கிய பாடல்கள் மூலம் யோகம், ஞானம், ரசவாதம், குளிகை, மருத்துவம் ஆகிய அறிவியல் துறைகளில் சித்தர் பாடல்கள் பாடி வருவதை நம்மால் அறிய முடிகிறது.

**சித்தர் கண்ட விஞ்ஞானமும், மெய்ஞானமும்**

அறிவியல் வளர்ச்சியின் வேதத்திற்கு ஏற்ப மனிதன் விரைந்து முன்னேற வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகிறது. விஞ்ஞானம் வளர வளர அதன் முதிர்ச்சியில் மெய்ஞானமும் தோன்றுகின்றன. மெய்ஞானம் என்பது துறவு நிலையும், விஞ்ஞானம் என்பது நாகரிக நிலையும் என மனதில் தோன்றுவது உண்மையல்ல. இன்றைய விஞ்ஞானிகள் பொருளைக் கொண்டுதான் தெளிகிறார்கள். மெய்ஞானிகள் ஒவ்வொரு பொருளின் தத்துவத்தை நுகர்ந்து தெளிந்து இருக்கிறார்கள். இவற்றை ஞான சக்தி, இச்சா சக்தி, கிரியா சக்தி ஆகிய மூன்றுநிலையில் இல்லாத பொருளே இல்லை என்பது விஞ்ஞானிகள் அறிந்தவையாகும். ஆனால் இம்மூன்றையும் அடக்கி எழுகின்ற உணர்ச்சியும் உண்டு என்பதை மெய்ஞானிகள் சங்க காலத்திலே அறிவியல் பூர்வமாகக் கணித்துள்ளன. இதனை சம்பந்தர் கூறுவது

**ஒரு நாள் நிகழ்ந்தது சொல்லவற்றே**
**நின்று உயிர்ப்பு அறவே**
**தருகாயம் இன்றி ஒர் ஆனந்தம்**
**எங்கும் தலைப்பட்டதே.......**[1]

எனும் பாடல் வரியில் அறிவு, இச்சை, செயல் ஆகியவை இன்றி ஓர் உணர்ச்சியும் ஏற்படுவதில்லை இவற்றின் அடிப்படையில் தான் தோன்றுகிறது.

**சித்தர்களின் ஐம்பூதக்கோட்பாடு**

சங்ககாலப் புலவர்களும், நிலம், நெருப்பு, காற்று, நீர், ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களும் கலந்த புவியன் அமைப்புகளை அறிந்து செயல்பட்டு இருக்கிறார்கள். மனித உடம்பு ஐம்பூதங்களால் ஆக்கப்பட்ட பிண்டம் என்பது அவர்கள் கோட்பாடாகும். இவை பிற்காலத்தில் சித்தர்களால் போற்றப்பட்ட சித்த மருத்துவத்தின் ஐம்பூதக்கொள்கையோடு ஒத்திருத்தலையும் அறிய முடிகின்றது. இதனை,

**"மண்டிணிந்த நிலனும் நிலனேந்திய விசும்பும்**

**விசும்பு தைவரு வளியும் வளிதலைஇய தீயும்.** [2] **(புறம்- 2: 1-6).**

என்ற புறநானூற்று பாடல் வரிகள் விளக்குகின்றன.

**இரண சிகிச்சை முறை**

சங்க இலக்கியங்களில் போரும், வீரமும் வீரனுக்கு அழகாகும். இப்போர்க்களத்தில் காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை முறை அக்காலத்தில் இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. "ஊனுக்கு ஊனிடல்" என்ற பழமொழிகள் நினைவு கொள்ளத்தக்கதாகும். இரண சிகிச்சை முறை பற்றிய விபரங்கள் சோழர் காலத்திலேயே திருமுக்கூடற் கல்வெட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளன. அக்காலத்துக் கண்ணப்பநாயனர் வரலாறும் காட்டுகின்றன. பண்டையநாளின் இரண சிகிச்சை முறைகளில் மருந்துகள், மரங்களின் பட்டை, பால், இலைச்சாறு முதலியவைப் பயன்படுத்தப்பட்டன. வெட்டுக்குத்துக் காயங்களுக்கு மருந்துகளின் செயற்பாடு பற்றி இந்திய வைத்தியமும், நாட்டு வைத்தியமும் பின்வருமாறு அமைந்துள்ளன.

**"இரும்புச்சுவை கொண்ட விழுப்புண் நோய் தீர்க்க**

**மருந்துகொள் மரத்தின் வாள்வடு மயங்கி**

**விடுவின்றி மயங்கிய யாக்கையன்".** [3] **(புறம்- 180: 4- 6).**

என்று இந்திய வைத்தியமும், நாட்டு வைத்தியமும் புறநானூற்றுப் பாடல் வலியுறுத்துக்கிறது.

சங்ககாலப் போரிலே புண்பட்டு பிளந்த காயங்களை மருத்துவர் ஊசியும் நூலும் கொண்டு தைத்துக் குணப்படுத்தியிருக்கிறர்கள். இதனை,

**"மீன்றேர் கொட்பிற் பனிக்கய மூழ்கிச்**

**சிரல் பெயர்ந் தன்ன நெடுவெள்ளூசி**

**நெடுவசி பரந்த வடு".** [4] **(பதிற்றுப் பத்து 5: 2).**

எனும் பதிற்றுப் பாடலின் மூலம் அறிய முடிகிறது.

**சித்தர் கண்ட யோக நெறி**

சித்தர்கள், மனதை ஒருநிலைப்படுத்தி யோக நெறியில் நின்று இறையருளை பெறுவது . இதற்கு காயசித்தி பெற்றவர்கள் என்று பொருள். சிவயோக சித்தையால் சிவ அனுபவம் பெற்றவரே சித்தர்கள். சிவபெருமானுக்கு சித்தர் என்ற பெயரும் உண்டு என சம்பந்தர் பாடியுள்ளர். சித்தி என்பதற்கு ஆன்மா இறைவனோடு இணையும் என்பது பொருளாகும். சித்து என்றால் அணுவையும் ஆராயும் ஆற்றல் உள்ளவர்கள். மனதில் திறன் பெற மந்திரமும், தன் நிலையில் உறுதியாக நிற்க தந்திரமும் முக்கியம் என்று சித்தர்கள் கருதியதால் தாங்கள் உடைய படைப்புகளில் முதலிடம் கொடுத்து இருக்கிறார்கள் உணரமுடிகிறது.

**சித்து:** யோகிகள் தன் ஆன்மீக வாழ்வில் பெறும் ஆற்றல்.

**மந்திரம்:**மனம் கட்டுப்பாட்டினுல் பெறும் ஆற்றல்.

**தந்திரம்:**கூர்மையான அறிவைப் பயன்படுத்திப் பெறும் ஆற்றல்.

ஆகிய இம்மூன்றின் உண்மைப் பொருளைக் கண்டறிந்து பின்பற்றி உள்ளனர்

**மருத்துவத்தில் ஜோதிடம்**

பஞ்சபூதத்தினால் ஆகிய இவ்வுடம்பின் இயக்கம் உடம்புக்கு வெளியேயுள்ள பஞ்சபூதங்களின்

இயக்கங்களாகவே செயல்படுகின்றன. இதனை,

**"அண்டத்தில் உள்ளதே பிண்டம்**
**பிண்டத்தில் உள்ளதே அண்டம்**
**அண்டமும் பிண்டமும் ஒன்றே**
**அறிந்துதான் பார்க்கும் போதே".** [5] **(சட்ட முனிஞானம்).** சித்தர் பாடல் உணர்த்துகிறது.

உடம்பில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறிய நாள், கோள், கிரகங்களின் நிலைகள் செயல்பாடுகள் என்பனவற்றையும் மருத்துவன் அறிந்திருக்க வேண்டியவன் ஆகின்றன். முழுமதி, அஷ்டமி, அமாவாசை முதலி நாட்களிலும் கோடை, மாரி முதலாம் பருவ காலங்களிலும் காலை, மாலை உடலில் தோன்றும் நோய்களின் இயல்புகள் மாற்றம் அடைகின்றன. எனவே மருத்துவர் நேரம் காலம் கிரகநிலை அறிந்திருத்தல் அவசியமாகிறது. இதனை,

**"ஜோதிடம் பஞ்சபட்சி துவங்கிய சரநூல் மார்க்கம்**
**கோதறு வராகவித்தை குருமுனி ஓதுபாடல்.........** [6] **(செய். 18).**

என சித்தர் நாடி நூல் மருத்துவரின் இயல்புகளை கூறுகிறது.சங்ககாலப் புலவர்கள் கோள்களின் அசைவுகளையும் அவற்றின் தாக்கங்களையும் பற்றியும் அறிந்திருந்தார்கள். வானித்திலுள்ள நட்சத்திரங்களின் மாற்றங்களால் ஏற்படும் பலன்களை அறிவியல் சார்ந்து அன்றே கணித்திருக்கிறர்கள். இதனை,

**செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்**
**பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்**
**வளிதிரிதரு திசையும்**
**வறிது நிலைஇய காயமு மென்றிவை**
**சென்றளந் தறிந்தோர்........"** [7] **(புறம் 30: 1- 5).** என்னும் புறநானுற்றுப் பாலின் மூலம் உணர்த்துகிறது.

**சித்தர்கள் கண்ட மருத்துவம்**

உலகமும் மனிதனும் உலகம் ஒரு அண்டம், மனிதன் அதில் ஒரு சிறிய பிண்டம் அண்டத்தில் இயங்கும் அத்தனை ஆற்றல்களும் பிண்டத்திலும் இயங்குகின்றன. மண், விண், நீர், தீ மற்றும் காற்று இப்பெரும் ஆற்றல்கள் மூலம் அண்டம், பிண்டம் ஆகிய இரண்டிற்கும் மூலாதாரமாக அமைகின்றன. இப்பெரும் ஆற்றல்கள் மனித உடலில் மூன்று பெரும் உயிர் ஆற்றல்களாக கூட்டுறவாகி இயங்கும்கின்றது. தமிழ் மருத்துவத்தில் இம்மூன்று பெரும் ஆற்றல்களே உயிர்த் தாதுக்கள் என அறிவியல் பூர்வமாக அழைக்கப்படுகின்றன. அவை வாதம், பித்தம், ஐ என்பனவாகும். இதனை,

**1.வாதம்:**விண்ணும் காற்றும் இணைந்தது (ஆக்கும் ஆற்றல் உடையது).

**2.பித்தம்:**(தீ காக்கும் ஆற்றல் உடையது).

**3.ஐ(கபம்):**மண்ணும் நீரும் இணைந்தது. அழித்தல் ஆற்றல் உடையது.

இம்மூன்றும் ஒன்று:1 ½:1 ¼ - மாத்திரை அளவு விகித அளவில் உடலில் ஏற்படும் போது உடல்

இயங்குவதற்குரிய ஆற்றல் தோன்றுகிறது.

**“வழங்கிய வாதம் மாத்திரை ஒன்றாகி**

**தழங்விய பித்தம் தன்னில் அமைவான்”** எனும் பாடல் வரிகள் மாத்திரை அளவை உணர்த்துகிறது.

**மருந்து செய்முறைகள்**

தமிழிலுள்ள சித்த மருந்து செய்முறைகள் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பழக்கத்தில் உள்ளவை. இவை இன்றைய அறிவியலாரும் ஒப்புக்கொள்கின்றனர். சித்த மருந்துகள் தாவரங்கள், தாதுப் பொருட்கள், உலோகங்கள், நடமாடும் உயிரினங்கள் ஆகிய நான்கு வகை மூலப்பொருட்களில் இருந்து உருவாக்கப்படுகின்றன. தமிழ் மருத்துவத்தில் மருந்துகள், அக மருந்துகள்32, புற மருந்துகள் 32 என 64 வகைகளாக குறிப்பிடுகின்றன.

**அக மருந்துகள்**

அகமருந்துகள், உடலின் உள்ளே வரும் நோயைக் குணப்படுத்தவும் வலி ஏற்படாமல் இருக்கவும் உடலின் உள்ளே பயன்படுத்துமாறு அமைந்தாகும். இதனை, அடை, இளகம், இலேகியம், உட்களி, உருக்கு, எண்ணெய், கட்டு(மாத்திரை), கடுகு, களங்கு, கற்பம், கற்கம், குடிநீர், குருகுளிகை, குழம்பு, சத்து, சாறு, சூரணம், தீநீர், தேனூறல், நீறு, வெண்ணீறு (பற்பம்), நெய், பக்குவம், பதங்கம், பிட்டு, மணப்பாகு, மாத்திரை, மெழுகு, வடகம், வெண்ணெய் ஆகிய 32 மருந்தாகும்.

**புற மருந்துகள்**

உடலில் வரும் கட்டி முதலியவற்றை அறுத்தெடுத்து விட்டு அக்காயத்தை குணப்படுத்தவும், வலி ஏற்படாமல் இருக்கவும் உடலின் வெளியே பயன்படுத்துமாறு அமைந்தாகும். இவை அட்டை விடல், அறுவை, உறிஞ்சல், ஊதல், ஒற்றடம், கட்டுதல், கலிக்கம், களி, களிம்பு, காரம், கீறல், குருதிவாங்கல், கொம்பு கட்டல், சலாகை, சீலை, சுட்டிகை, தொக்கணம், நசியம், நாசிகா, பரணம், நீர், பசை, பொடி, பீச்சு, புகை, பூச்சு, பொட்டணம், பொடி திமிர்தல், முறிச்சல், மை, வர்த்தி, வேது ஆகிய 32 அக மருந்துகள் என கூறுவர்

**சித்தர் பார்வையில் ஆன்மிகம்**

சித்தர்களிலே சிவவாக்கியருக்கு ஒரு தனி இடமும் சிறப்பும் உண்டு. மனிதனுக்கு காரியம் ஆக வேண்டும் என்றால் இறைவன்ன் எவரெஸ்ட் சிகரத்திலே போய் ஒளிந்து கொண்டால் கூட ஆகாயம் விமானம் அல்லது விண்வெளிக் கலங்கள் மூலம் மனிதன் இறைவனை பிடித்து விடுகிறான். அதனால் இறைவன் உடம்பினுள் மிக மிக நுட்பமான முறையில் மெய்ப்பொருள் மறைந்து நிற்கிறது! மனிதன் அதைக் காண முடியாமல் வெளியே சென்று எங்கெங்கோ தேடுகிறான் பிறகு வாடுகிறான் இதுவே மனித குலத்தின் சரித்திரமாக சிவவாக்கியர் கூறுவதாக

**ஓடி ஓடி ஓடி ஓடி**
**உட்கலந்த ஜோதியை**

**நாடி நாடி நாடி நாடி**

**நாட்களும் கழிந்துபோய்** **(சிவவாக்கியர்).**





என்னும் பாடலின் மூலம் மனிதன் இறைவனைக் காண ஓடி ஓடி நாடி நாடி நாட்கள் கழிந்து இந்த ஓட்டம் நடந்துக் கொண்டே இருக்கிறது.இதனை,

**வாடி வாடி வாடி வாடி**

**மாண்டு போன மாந்தர்கள் (சிவவாக்கியர்).**

இறைவனைக் காண முடியாமல் வாடி வாடி அந்த வட்டாரத்திலே உயிரைவிட்ட மனிதர்கள் எத்தனையோ பேர்! அந்த எண்ணிக்கை எண்ணில்லாத கோடியே எனும் சிவவாக்கியருடைய அற்புதமான பாடல் நமக்கு உணர்த்துகிறது.

**நிறைவுரை**

சித்தர் பாடலில் காண்கின்ற அத்தனை அறிவியலும் பொதுமக்களிடம் தமிழ்ச் சமுதாயத்தில் பரவி வேரூன்றி இருக்கின்றன. வாழ்வே மாயமானதும் நிலையற்றதும் என்பதை நன்கு உணர்ந்தவர்கள் சித்தர்பெருமக்கள். ஆகையால் தான் நிலையற்ற வாழ்விலே நிலையானதைத் தேடி கொள்ளவும் நமக்கு பிறகு நல்லதை விட்டுச்செல்லவும் வேண்டும் என்பதில் அவர்கள் உறுதியாக இருந்தார்கள். அதன் விளைவாக சித்தர்களின் அறிவியல் சார்ந்த பக்தி, ஒழுக்கம், மருத்துவக் குறிப்புகளை நம் நமது வாழ்க்கையில் கடைப்பிடித்து வந்தால் நோயற்ற இன்பமான வாழ்க்கையை வாழலாம் என்பது உண்மையாகும்.

**பயன்பட்ட நூல்கள்**


1. பாலசுந்தரம். இ, இலக்கியத்தில் மருத்துவக் கருத்துக்கள், நாட்டார் வழக்கியல் கழகம், முதற்பதிப்பு, திருநெல்வேலி, ஆகஸ்ட்- 1990.
2. பரமேசுவரி. ச, சித்தர்கள் கூறும் சித்த மருத்துவ குறிப்புகள், தொகுப்பு மூன்று அக்டோபர்- 2019.
3. சிதம்பரனார், சித்தர்கள் கணட விஞ்ஞானம்- தத்துவம், முதற்பதிப்பு ,சென்னை- 2, 1961.
4. புவனேஸ்வரி. சீ, சித்தர் இலக்கியத்தில் அறிவியல் சிந்தனைகள், புதிய அவையம், தொகுதி ஏழு, சென்னை 67, ஜூன் 2023.
5. நஜன், சித்தர்கள் காட்டிய யோக நெறி, முதற்பதிப்பு, சென்னை-4, ஜூன்- 1994
6. சோமசுந்தரம் சோமு. மீ.ப, சித்தர் இலக்கியம் 6, முதல் பதிப்பு, அண்ணாமலை நகர், 2009.
7. நாகராஜன். மு, சித்தர்கள் காட்டும் வாழ்வியல் முறைகள், பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ், கோவை, மூன்றாம் பதிப்பு ஜூலை 2018.
8. ஞானசிகாமணி. வீ, அகத்தியர் ஞானம் (விளக்கவுரை), சென்னை- 37, நான்காம் பதிப்பு, 2014.




